2018 ஜூன் 7]

செய்த வரலாறு உண்மை. ஆனால், கடந்த 3 மாதங்களாக தென்மேற்குப் பருவமழை சரியாகப் பெய்வதால், அவர்கள் குறிப்பிடுகின்ற மேற்குத் தொடர்ச்சி மலையில் அருமையான மழை பெய்திருப்பதால், அதுபோன்ற ஒரு நிலை இல்லை. ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தச் செய்திகளை அவர் தனியாக எழுதிக் கொடுத்தால், வனத் துறை மூலமாகப் பரிசீலிக்கப்பட்டு, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 142, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

142—

புதிய பாடப் பிரிவு

***27500—திரு. எ.பி. சக்திவேல்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்நிலைப் பள்ளி பாடத் திட்டத்தில் ஜவுளி மேலாண்மையை புதிய பாடப் பிரிவாக உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மேல்நிலைக் கல்விப் பாடத் திட்டத்தில், தொழிற்கல்விப் பிரிவில் துணிகளும்-ஆடை வடிவமைப்பும் மற்றும் ஆடை தொழில்நுட்பம் போன்ற பாடங்களில் ஜவுளி மேலாண்மை குறித்த கருத்துகள் மாணவர்களுக்கு ஏற்கெனவே பாடமாக கற்றுத் தரப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.*

திரு. எ.பி. சக்திவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர் சமுதாயத்திற்கு நாள்தோறும் நலத்*

திட்டங்களை வாரி வழங்கிய அன்புத் தாய், ஆராதனைக்குரிய இதய தெய்வம் அம்மா அவர்களின் நினைவினைப் போற்றி வணங்குகிறேன். இதய தெய்வம் அம்மா அவர்களின் வழியில் அனைத்து நலத் திட்டங்களையும் தொடர்ந்து வழங்கி, பள்ளிகளின் தரத்தை உயர்த்தி, உட்கட்டமைப்பு வசதிகளுக்காக நிதியொதுக்கிக் கொடுத்து மாணவர் சமுதாயம் மனம் மகிழ்வுடன் நன்றிகூறும் வகையில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், துறை சிறக்க நிதி வழங்கி துணை நிற்கும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், பார்போற்றும் வகையில் பள்ளிக் கல்வித் துறையில் புதிய பரிணாமங்களுடன் செயல்முறைத் திட்டத்தை வடிவமைத்து, பள்ளிக் கல்வித் துறையில் புரட்சியும், மறுமலர்ச்சியும் உருவாக்கிய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும், தங்களையும் வணங்கி மகிழ்கின்றேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னைத் தமிழகத்தில் அரசுப் பள்ளிகள் 2,947-ம் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் 1,203-ம், சுயநிதி பள்ளிகள் 3,349-ம் முறையே 86,519, 37,484, 1,46,138 ஆசிரியர்களைக்கொண்டு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் அரசுப் பள்ளிகளில் 19,69,955 மாணவ, மாணவியர்களும், அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 13,83,130 மாணவ, மாணவியர்களும், சுயநிதிப் பள்ளிகளில் 33,85,242 மாணவ, மாணவியர்களும் கல்வி பயின்று வருகின்றனர். இவர்களுக்கு அறிவியல் பாடப் பிரிவுகள், வணிகவியல் பாடப் பிரிவுகள், கலைப் பாடப் பிரிவுகள், தொழில் பாடப் பிரிவுகள் ஆகிய தலைப்புகளின்கீழ் கல்வி போதிக்கப்பட்டு வருகிறது. இதில் தொழில் பாடப் பிரிவுகளில் நெசவு சார்ந்த Textile Management என்று சொல்லப்படும் ஜவுளி மேலாண்மை குறித்த பாடப் பிரிவை ஏற்படுத்தித் தந்தால், கல்வி பயிலும் மாணவ, மாணவிகளின் உயர் கல்விக்கும், அவர்கள் சுயதொழில் தொடங்குவதற்கும் ஏதுவாக இருக்கும். குறிப்பாக, பெண்கள் இப்பாடப் பிரிவில் கல்வி பயின்று வீட்டிலிருந்தபடியே சுயதொழில் செய்து வருமானம் ஈட்டி, அதனால் எதிர்கால நலனுக்கும், குடும்பத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் உதவியாக இருக்கும் என்பதால், மேல்நிலைப் பள்ளி பாடத் திட்டத்தில் ஜவுளி மேலாண்மை

2018 ஜூன் 7]

என்ற புதிய பாடப் பிரிவை உருவாக்கித் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தேன். ஜவுளி மேலாண்மை குறித்த பாடத் திட்டங்கள் இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். தொழில் பாடப் பிரிவான இந்த ஜவுளி மேலாண்மைப் பாடப் பிரிவினை சேலம், நாமக்கல், கரூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களிலுள்ள அனைத்து அரசுப் பள்ளிகளிலும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியை மட்டும் கேளுங்கள். உரை நிகழ்த்தாதீர்கள். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல,* Textile Management *என்று சொல்லப்படுகிற பாடத் திட்டம் இப்போது இணைக்கப்பட்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், புதிதாக 12 பாடப் பிரிவுகளைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளும் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. படித்த இளைஞர்களுக்கு, எதிர்காலத்தில் +2 முடித்தவுடனேயே, அந்தந்தப் பகுதிகளிலேயே குறைந்தபட்ச வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய நிலையை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. எதிர்காலத்தில் வேலையின்மையே இல்லை என்ற நிலையை தமிழகத்திலே உருவாக்குவதற்கும், பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் இந்த அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.*

திரு. எ.பி. சக்திவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப் பாடத் திட்டத்தில் தொழில் பாடப் பிரிவின்கீழ் கல்வி பயிலும் மாணவ, மாணவிகள் நேர்முகப் பயிற்சி பெறவும், செய்முறை பயிற்சி பெறவும் பள்ளிக் கல்வித் துறையின்கீழ் தொழில் நிலையங்கள் மற்றும் பயிற்சிக் கூடங்கள் அமைத்துத் தர வேண்டுமெனவும், எழுத்துத் தேர்விற்கு அவர்களுக்கு அளிக்கப்படும் மதிப்பெண்கள் போலவே, செய்முறைத் தேர்வு எனப்படுகிற* practical exam-*க்கும் மதிப்பெண்கள் அளித்து, இப்பிரிவின்கீழ் கல்வி*

பயிலும் மாணவ, மாணவியர்களை ஊக்கப்படுத்தி, அவர்களின் சேர்க்கையை அதிகப்படுத்திட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லரசை தலைமையேற்று வழிநடத்துகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அண்ணார் அவர்களும் ஆவன செய்திட வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு விடைபெறுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நோக்கமும் அதுதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, எந்தெந்தப் பகுதிகளில் எந்தெந்தத் தொழிற்சாலைகள் இருக்கின்றனவோ, அவற்றை ஒருங்கிணைத்து அந்தப் பகுதியில் இருக்கின்ற மாணவர்கள் விடுமுறை நாட்களில் அத்தொழிற்சாலைகளுக்குச் சென்று பயிற்சிகள் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதேபோல்,* Leather Technology, Designing, Hospital Management *போன்ற பல்வேறு தொழில் பாடப் பிரிவுகளை உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அதனடிப்படையில், மாணவர்கள் விடுமுறை நாட்களில் விரும்பினால், அந்தந்தப் பகுதியில் இருக்கிற பெரிய தொழிற்சாலைகளுடன் ஒருங்கிணைந்து, அந்தப் பணிகளை மேற்கொள்வதன் மூலமாக அவர்களுக்கு வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் கிடைக்கும். அதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 143, மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

143—

கருணைத் தொகை

***25790—திரு. வாகை சந்திரசேகர்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—